**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**
**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**தேதி : 24-02-2026**

**CRLMP.No : 37/2026**

**மனுதாரர் : வெங்கடேசன் த/பெ. மாதேஷ்**

**மனுதாரரின் சத்தியபிரமாண வாக்குமூலம்:**

நான் தற்போது வாடமங்கலம் கிராமத்தில் குடியிருந்து பேக்கரி வைத்து தொழில் செய்து வருகிறேன். எங்கள் ஊரை சேர்ந்த முருகேசன் த/பெ. பச்சியப்பன் என்பவரிடம் நிலம் வாங்குவதற்காக 34 லட்சத்து 20 ஆயிரம் ரூபாயை கொடுத்தேன். பணத்தை பெற்றுக்கொண்ட முருகேசன் நிலத்தை எனக்கு தராமல் வேறு ஒருவருக்கு விற்பனை செய்துவிட்டார். அதனால் நிலத்தை அல்லது பணத்தை மீட்டு தரும்படி கேட்டுக்கொள்கிறேன். கடந்த 11.06.2017 ஆம் தேதி முருகேசன் என் வீட்டிற்கு வந்து தன்னுடைய வீடு மற்றும் நிலம் ஜப்திக்கு வந்துவிட்டதாகவும், அதனால் வங்கி கடன் பணத்தை வங்கியில் செலுத்தி, மீட்டுக்கொண்டு என் பெயரில் கிரையம் செய்துகொள்ள கூறினார். முருகேசனின் நிலமான 2 ஏக்கர் 16 சென்ட்நிலத்தை வீடு உட்பட 39 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயிக்கு பேசி 12.06.2017 ஆம் தேதி உடன்படிக்கை எழுதிக்கொண்டு 11 லட்சத்து 75 ஆயிரம் ரூபாயை பாரூர் இந்தியன் வங்கியில் முருகசேனின் வங்கி கணக்கில் செலுத்தினேன். 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் கையில் கொடுத்தேன். வங்கியில் ஒரு மாதத்தில் NOC சான்றிதழ் வழங்குவதாக தெரிவித்தார்கள். இந்நிலையில் முருகேசனின் தாயார் இறந்துவிட்டதால் 3 மாதம் எதுவும் செய்ய முடியாது என்று கூறிவிட்டார். கடந்த 05.09.2017 ஆம் தேதி கடன் தொல்லை இருப்பதாக கூறி 5 லட்சம் ரூபாய் வாங்கி சென்றார். கடந்த 11.10.2017 ஆம் தேதி 5 லட்சம் ரூபாய் பெற்றுசென்றார். பின்பு மீண்டும் 2 லட்சம் ரூபாய் மற்றும் 3 லட்சம் ரூபாய் பெற்று சென்றார். இதற்கு முன்பாக இருந்த உடன்படிக்கை காலாவதி

ஆகிவிடும் என்பதால்  என்னிடம் வாங்கிய தொகையான மொத்தம் 30 லட்சம் ரூபாய்க்கு 12.12.2017 ஆம் தேதி பணத்தை பெற்றுக்கொண்டதாக என்னிடம் அக்ரிமன்ட் ஒன்றை செய்துக்கொண்டார். பின்பு 13.12.2017 ஆம் தேதி ஒரு லட்ச ரூபாய் பெற்றுசென்றார். முருகேசன் என்னிடம் வாங்கிய பணத்திற்கு என் மாமனார் மாதன், பேக்கரில் என் கடையில் பணிபுரியும் மாஸ்டர் முருகேசன் என்பவர் முன்னிலையில் கொடுத்தேன். கிரையம் செய்துகொடுக்கசொல்லி கேட்டப்போதோல்லாம் ஏதாவது ஒரு காரணம் சொல்லி காலம் தாழ்த்தி அவரது 2வது மனைவி சாந்தி பெயரில் கிரையம் செய்து கொடுத்துவிட்டார். நாங்கள் தகவல் தெரிந்து கேட்டபோது கிரையம் செய்து கொடுப்பதாக வாக்கு கொடுத்தார். இந்நிலையில் முதல் மனைவி சாந்தி என்பவர் கிருஷ்ணகிரி நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். நாங்கள் சென்று கேட்டபோது மீதி 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் தொகையை கொடுத்தால் கிரையம் செய்து கொடுப்பதாக கூறியதால் முருகேசன் 2வது மனைவி சாந்தி பெயருக்கு 3 லட்சரூபாய் கனரா வங்கி, பொம்மிடி கிளையில் டேப்பாசிட் செய்தேன். பின்பு பத்திரபதிவு செய்வதற்காக சார்பதிவாளர் அலுவலகம் சென்றோம். அங்கு வைத்து ரூபாய் 20 ஆயிரம் பெற்றுக்கொண்டார். அதை பெற்றுக்கொண்டு சென்ற முருகேசன், அவரது 2 வது மனைவி சாந்தி, மற்றும் முருகேசனின் நண்பரான மயில் (எ) வெங்கடாச்சலம் ஆகியோர் கிரையம் செய்துகொடுக்காமல் சென்றுவிட்டனர். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தோம். 1 1/2 வருடங்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. நாங்கள் தொடர்ந்து காவல் நிலையம் சென்று வந்து கொண்டியிருந்தோம். ஊர்காரங்களை வைத்தும் பேசிக்கொண்டிருந்தோம். மேற்படி நிலத்தை உமா செல்வராஜ் என்ற ஒருவருக்கு விற்றுவிட்டார்கள். என்னை ஏமாற்றிய முருகேசன், அவருடைய 2வது மனைவி

சாந்தி, முருகேசனின் நண்பர் மயில் (எ) வெங்கடாச்சலம் ஆகியோர் மீது நடவடிக்கை எடுத்து என் பணத்தை மீட்டு தரும்படி கோருகிறேன்.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Sd/-D.Saravanan.,B.A.,B.L.,
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli (FAC)